**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097181

1. District : மாவட்டம் விருதுநகர் PS: காவல்நிலையம் ஊதக பிரிவு Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 06/2018 Date: நாள் 02-04-2018

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1998 Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 22-03-2018 13.00 hrs Time from : நேரம் முதல் 28-03-2018 Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02-04-2018 08.00 hrs Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02-04-2018 08.00 hrs. Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : ✓
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 25 கி.மீ, கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.T. இராமசந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. தவமணி.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1974 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனியார் நிறுவன மேலாளர் (g) Address : முகவரி கதவு எண்-14, புதூர் சங்கரலிங்கம் தெரு, சொக்கலிங்கபுரம், அருப்புக்கோட்டை. விருதுநகர் மாவட்டம்,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. முத்து, நகராட்சி பொறியாளர், மற்றும் பொறுப்பு-ஆணையாளர், அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம், விருதுநகர் மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
வாதியால் தாமதம்.

* GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :-

நான் இன்று 02-04-2018 ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் அலுவலக பணியில் இருந்த போது அருப்புக்கோட்டை தாலுகா, சொக்கலிங்கபுரம், புதூர் சங்கரலிங்கம் தெரு, க.எண் 14-யை சேர்ந்த திரு. தவமணி என்பவரின் மகன் திரு. T. சோமசுந்தரம் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை கணினியில் தட்டச்சு செய்து. அவருக்கு படித்து காண்பித்து அவரிடம் கையொப்பம் பெற்று அந்த புகாரை உதக துறை இயக்குநருக்கு அனுப்பி முதன்மை விசாரணைக்கு அனுமதி பெற்று அந்த அனுமதியின் பிரகாரம் PE. 93/2018/LB/VN. நாள் 02-04-2018ஆக

[தனிதாளில் இணைக்கப்பட்டுள்ளது]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்டப் பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. ஹரிநாதன் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Somu 2/4/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

02-04-2018

Name: பெயர் R. ஹரிநாதன்
Rank: நிலை ..........................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உதக பிரிவு, விருதுநகர்,

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.6/2018 பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம், 1988ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:- பதிவு செய்து, விசாரணை செய்து, அந்த முதனிலை விசாரணையில் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பதாக இன்று (02.04.2018) தெரியவந்ததால், முதனிலை விசாரணையை முடித்து தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தெரிவித்துவிட்டு இன்று 02.04.2018ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2018 பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம், 1988ஆக எதிரி திரு.முத்து, நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு ஆணையாளர், அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்கள்மீது வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார் வாக்குமூலம் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்:- த.சோமசுந்தரன் (43/18), த/பெ.தவமணி, கதவு எண்.14, பூலூர் சங்கரலிங்கன் தெரு, சொக்கலிங்கபுரம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். பெறுனர் :- உயர்திரு ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, மாவட்ட ஆட்சியர் வளாகம், விருதுநகர். ஐயா, நான் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து, முதல்நிலை ஒப்பந்ததாரராக இருக்கும் அருப்புக்கோட்டை ஊரைச் சேர்ந்த திரு.எஸ்.கே.சுப்பாரெட்டியாரிடம் கடந்த 7 ஆண்டுகளாக, அருப்புக்கோட்டை நகராட்சியில் அவர் பெயரில் நடைபெறும் ஒப்பந்த பணிகளை செய்ய ஒப்பந்த புள்ளிகள் அளிப்பது சம்பந்தமான பணிகளை செய்வது, அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி அளித்த பணிக்கு வேலை உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் அந்த பணிகளை செய்து முடிப்பது, அவ்வாறு செய்து முடித்த பணிக்கான தொகையை நகராட்சியிலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை போக மீதித்தொகையை காசோலையாக பெறுவது மற்றும் நகராட்சியில் செய்து முடித்த பணிக்கு பிடித்தம் செய்யப்பட்ட 5 சதவீத கூடுதல் காப்புத் தொகை, 1சதவீத முன்வைப்புத் தொகை ஆகியவற்றை காசோலையாக திரும்பப் பெறுவது ஆகிய பணிகளை செய்து வருகிறேன். அவ்வாறு காசோலைகளை நகராட்சியிலிருந்து பெறும்போது மட்டும் எனது உரிமையாளரான ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கே.சுப்பாரெட்டியார் என்னுடன் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் வந்து காசோலைகளின் அடிக்கட்டை உட்பட சம்பந்தப்பட்ட ஆவணங்களில் கையொப்பமிட்டு செல்வார். அதன்படி கடந்த 3 வருடத்திற்கு முன்பு எனது உரிமையாளரான ஒப்பந்தகாரர் திரு.எஸ்.கே.சுப்பாரெட்டியார் பெயரில் செய்த ஒப்பந்த பணியான ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் அருப்புக்கோட்டை நகராட்சியில் நேதாஜி மயான சாலை அமைக்கும் பணியை செய்து முடித்து, அதற்கான பிடித்தம் செய்யப்பட்டதுபோக மீதித்தொகையை எனது உரிமையாளர் பெயரில் இரண்டு காசோலைகளாக வழங்கப்பட்டதை நான் பெற்றுக்கொண்டு, பின்பு அந்த காசோலைகளை பெற்றுக் கொண்டதற்கு எனது உரிமையாளர் திரு.எஸ்.கே.சுப்பாரெட்டியார்

என்னுடன் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு வந்து காசோலைகளின் அடிக்கட்டை உட்பட சம்பந்தப்பட்ட ஆவணங்களில் கையொப்பமிட்டு சென்றார். அவ்வாறு பெறப்பட்ட காசோலைகளுக்குண்டான பணிக்கு பிடித்தம் செய்யப்பட்ட 5 சதவீத கூடுதல் காப்புத் தொகையை திரும்ப பெறுவதற்காக எனது உரிமையாளரான ஒப்பந்தகாரர் திரு.எஸ்.கே.சுப்பாரெட்டியார் உத்தரவின்பேரில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு அருப்புக்கோட்டை நகராட்சியில் எனது உரிமையாளர் பெயரில் நான் விண்ணப்பம் அளித்துவிட்டு, கடந்த 22.03.2018ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் சென்று நகராட்சி அலுவலக கணக்கர் திரு.தியாகராஜன் என்பவரிடம் கேட்டேன். அதற்கு அவர் நகராட்சி பொறியாளரும், பொறுப்பு நகராட்சி ஆணையாளருமான திரு.முத்து அவர்களை சந்தித்துதான் கேட்கவேண்டும் என்று கூறினார். ஆகையால் நான் அன்று (22.03.2018) மதியம் சுமார் 1.00 மணியளவில் மேற்படி நகராட்சி பொறியாளரும், பொறுப்பு நகராட்சி ஆணையாளருமான திரு.முத்து அவர்களை அலுவலகத்தில் வைத்து சந்தித்து, மேற்படி 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்துமுடித்த பணிக்கான 5 சதவீத கூடுதல் காப்புத் தொகையை திரும்ப பெறுவதற்காக எனது உரிமையாளர் பெயரில் கொடுத்த விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டேன். அப்போது, அவர் என்னுடைய உரிமையாளரை எங்கே என்று கேட்டு, வேலைகளை முடித்துவிட்டு நீங்கபாட்டுக்கு காசோலைகளை வாங்கிட்டு போயிறீங்க, ஒன்னும் கவனிக்க மாட்டேங்கிறீங்க என்று கூறி, மேற்படி 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்துமுடித்த பணிக்கான 5 சதவீத கூடுதல் காப்புத் தொகை ரூ.3,74,765/-ஐ நீங்க திரும்ப பெறவேண்டுமென்றால் எனக்கு நீங்கள் ரூ.28,000/- கொடுக்கவேண்டும் என்றும், அப்படி ரூ.28,000/-ஐ கொடுத்தால்தான் அந்த கூடுதல் காப்புத் தொகை கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்றும் கூறினார். உடனே நான் எனது உரிமையாளரிடம் கேட்டுட்டு வந்து சொல்றேன் சார் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்பு வீட்டிற்கு வந்து எனது உரிமையாளரிடம் மேற்படி தகவல்களை தெரிவித்தேன். அப்போது அவர் நீயே என்னான்னு பார்த்துக்கோ என்றும், அவ்வளவு ரூபாய் எப்படி ரெடி பண்ணி கொடுக்கிறது என்றும் கூறி, நீ திரும்பவும் மேற்படி நகராட்சி பொறியாளரும், பொறுப்பு நகராட்சி ஆணையாளருமான திரு.முத்து அவர்களை சந்தித்து கேள் என்று சொன்னார். ஆகையால் கடந்த 28.03.2018ஆம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் சென்று பொறுப்பு நகராட்சி ஆணையாளர் திரு.முத்து அவர்களை அலுவலகத்தில் வைத்து சந்தித்து, எனது உரிமையாளர் சொன்னதை கூறி அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது சார், பார்த்து செய்யுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் அதெல்லாம் கிடையாது, நீங்கவேணா ரூ.3000/-ஐ குறைச்சிக்கிட்டு, ரவுண்டா ரூ.25,000/-ஐ லீவு நாட்கள் முடிந்தபின் அதாவது நான்கு அரசு விடுமுறை நாட்களை

கழித்து கொண்டுவந்து கொடுங்க, அதன்பிறகுதான் உங்களுக்குண்டான அந்த 5 சதவீத கூடுதல் காப்புத் தொகை ரூ.3,74,765/-க்கான காசோலையை ரெடிபண்ணி தருவேன் என்று கறாராக கூறிவிட்டு, நீங்க காசோலையை வாங்கிகிட்டு, எப்பவும்போல உங்க உரிமையாளரை கூட்டிட்டுவந்து காசோலை அடிக்கட்டை உட்பட இதர ஆவணங்களில் கையெழுத்து போடச்சொல்லுங்க என்று சொல்லிவிட்டு, நீங்க ஒழுங்க உங்க முதலாளிக்கிட்ட சொல்லி இந்த ரூபாய் 25,000/-ஐ ரெடி பண்ணி கொண்டுவந்து தரலைன்னா, நான் உங்க முதலாளிக்கிட்ட சொல்லி, உங்கள அவர்கிட்ட வேலை பார்க்கவிடாம செய்துவிடுவேன் என்றும் சொன்னார். ஆகையால் நானும் வேறுவழியின்றி சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்குவந்து, எனது உரிமையாளரான திரு.சுப்பாரெட்டியாரை மறுநாள் (29.03.2018) வியாழக்கிழமை அவரது வீட்டிற்குச் சென்று சந்தித்து, மேற்படி தகவல்களைச் சொல்ல, அதற்கு அவர் நியாயமாக அவர்கள் செய்யவேண்டிய வேலையை செய்வதற்கு எதற்கு நாம் லஞ்சப்பணம் கொடுக்கவேண்டும் என்றும், லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லையென்றும் கூறி, நீ லஞ்சஒழிப்புத்துறையில் புகார் செய்து நீயே என்னான்னு பார்த்துக்கோ என்றும் சொன்னார். நானும் யோசித்துப் பார்த்ததில் நியாயமாக அவர்கள் செய்யவேண்டிய வேலையை செய்வதற்கு எதற்கு நாம் லஞ்சப்பணம் கொடுக்கவேண்டும் என்று நினைத்து, லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லாமல் மேற்படி பணம் ரூ.25,000/-ஐ ரெடி பண்ணிக்கொண்டு, இன்று 02.04.2018ஆம் தேதி காலை 08.00 மணிக்கு விருதுநகர் லஞ்சஒழிப்பு பிரிவு அலுவலகம் வந்து, அருப்புக்கோட்டை நகராட்சியில் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் எனது உரிமையாளர் ஒப்பந்ததாரர் திரு.சுப்பாரெட்டியார் பெயரில் செய்து முடித்த பணிக்கு பிடித்தம் செய்யப்பட்ட 5 சதவீத கூடுதல் காப்புத்தொகையான ரூ.3,74,765/-ஐ திரும்ப காசோலையாக தயார் செய்து என்னிடம் தருவதற்கு ரூ.25,000/- லஞ்சம் கேட்ட நகராட்சி பொறியாளரும், பொறுப்பு நகராட்சி ஆணையாளருமான திரு.முத்துமீது நடவடிக்கை எடுக்க இந்த புகார் வாக்குமூலத்தை கொடுக்க, அதை தாங்கள் கணிணியில் தட்டச்சு செய்து எனக்கு படித்து காண்பித்தீர்கள், அது சரியாக இருக்கிறது. (Sd)(T.Somasundaran, 2/4/18)

Submitted,

Recorded the statement on 02.04.18 at 08.00 hrs and sent it to the Director, DVAC., Chennai for seeking permission to register PE in this regard. (Sd.R.Boominathan 2.4.18) Insp. of Police, V&AC, VNR.

Permission obtained from the Director, DVAC., Chennai to register PE vide PE.93/2018/LB/VN on 02.04.18 at 09.15 hrs. (Sd.R.Boominathan 2.4.18) Insp. of Police, V&AC, VNR..

Conducted confidential enquiry on PE.93/2018/LB/VN and found prima-facie for the mentioned allegation. Since the registration of regular case is warranted in the prima facie, the matter is intimated orally to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.6/2018 U/s 7 of PC Act, 1988 on the complaint of the complainant Tr.T.Somasundaran (43/18), S/o.Thavamani, Door No.14, Poolur Sankaralingan Street, Chokkalingapuram, Aruppukkottai on 02.04.2018 at 13.30 hrs. The original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM cum Spl. Judge, Srivilliputhur and the copies submitted to the concerned officers. (Sd.R.Boominathan 02.04.18) Insp. of Police, V&AC, VNR.

Insp of police,
V&AC, VNR